ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2199/17 - 2020 ඔක්තෝබර් මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.10.29

*2199/17 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 19/78* (vi)

***1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பிரதம நீதியரசருடனும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவருடனுமான கலந்தாலோசனையுடன் நீதி அமைச்சர் எம். யூ. எம். அலி சப்ரி ஆகிய நான், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 2010, நவெம்பர் 10 ஆந் திகதிய 1679/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் அட்டவணையை பின்வருமாறு இக்கட்டளை மூலம் திருத்துகின்றேன் :-*

(i) *"நியாயாதிக்க இடப்பரப்பு" என்னும் தலைப்பின் கீழ் நிரல்* I *இன் கீழும் நிரல்* IV *இலுள்ள அதனது நேரொத்த பதிவின் கீழும் நேரொத்த கம்பஹா நீதி வலயத்துக்கெதிராக காணப்படும் "மாவட்டம்" என்னும் தலைப்பின் கீழ் நிரல்* II *இல் காணப்படும் "1. கம்பஹா" என்னும் பதிவிற்குப் பதிலாக முறையே பின்வரும் பதிவுகளை இடுவதன் மூலமும் :-*

*"1.* ***கம்பஹா*** — *கம்பஹா நீதி மாவட்டம் ஆனது கம்பஹா நீதிப் பிரிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்."* ;

(ii) *நிரல்* III *இன் கீழ் நேரொத்த கம்பஹா நீதிப் பிரிவிற்கெதிராகக் காணப்படுகின்றதும், நிரல்* II *இன் கீழ் நேரொத்த கம்பஹா நீதி மாவட்டத்திற்கெதிராகக் காணப்படுகின்றதும் மற்றும் நிரல்* I *இன் கீழ் நேரொத்த கம்பஹா நீதி வலயத்துக்கெதிராகக் காணப்படுகின்றதுமான "நியாயாதிக்க இடப்பரப்பு" என்ற தலைப்பின் கீழ் நிரல்* IV *இல் காணப்படுகின்ற அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவு தொடர்பான பதிவுகளை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-*

*"2.* ***மஹர*** — *மஹர நீதி மாவட்டமானது, மஹர நீதிப் பிரிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்."*;

1A - G 33201 — 75 (2020/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(iii) "பிரிவு" என்னும் தலைப்பின் கீழ் நிரல் III இல் காணப்படுகின்றதும் நிரல் II இன் கீழ் நேரொத்த கம்பஹா நீதி மாவட்டத்திற்கெதிராகக் காணப்படுகின்றதும் நிரல் I இன் கீழ் நேரொத்த கம்பஹா நீதி வலயத்திற்கெதிராகக் காணப்படுகின்றதுமான "2. மஹர" என்னும் சொல்லையும் எண்ணையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "1. மஹர" என்னும் சொல்லையும் எண்ணையும் இடுவதன் மூலமும் ;

(iv) "வலயம்" என்ற தலைப்பின் கீழ் நிரல் I இல் காணப்படுகின்ற "2. கம்பஹா" என்ற பதிவீட்டுக்கும், "நியாயாதிக்க இடப்பரப்பு" என்னும் தலைப்பின் கீழ் நிரல் IV இல் உள்ள அதன் நேரொத்த பதிவீட்டுக்குப் பதிலாக முறையே பின்வரும் பதிவீடுகளை இடுவதன் மூலமும்.

"2. **கம்பஹா** கம்பஹா நீதி வலயம், கம்பஹா, பூகொட, அத்தனகல்ல மற்றும் மஹர ஆகிய நீதி மாவட்டங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்." ;

**எம். யூ. எம். அலி சப்ரி**,
நீதி அமைச்சர்.

கொழும்பு.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.